**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,இலுப்பூர்**

**முன்னிலை : திருமதி. M.சாதத்துனிஷா, பி.ஏ.பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இலுப்பூர்.

2026ம் ஆண்டு ஜீலை திங்கள் 22ம் நாள் புதன் கிழமை

ஆண்டு பட்டிகை வழக்கு எண் 44/2021

**(CNR.NO.TNPD12-000066-2021)**

| | | |
|---|---|---|
| 1. | Name of the Court | District Munsif Cum Judicial Magistrate Court, Illuppur |
| 2. | Name of the Judge | Tmt.M.Sathathunisha, BA.BL., |
| 3 | Date of Judgment | 22.07.2026 |
| 4. | Case Number along with CNR Number | **CC-44/2021,TNPD12- 000066-2021)** |
| 5. | Name of the Parties of the case | The Inspector of Police, Iluppur- **Complainant** |
| | | Ramachandran **Accused** |
| 6. | Date of Occurence | 01.01.2021 |
| 7. | Date of Complaint | 01.01.2021 |
| 8. | Date of Arrest if any and remand | 02.01.2021 |
| 9. | Period of Remand of the Accused | --- |
| 10. | Date if release on bail | 02.01.2021 |
| 11. | Date of Final Report | 18.05.2021 |
| 12. | Date of Committal of the case to the Court of Sessions | - |
| 13. | Date of Questioning of the | 15.12.2021 |

M SATHATHUNISHA Digitally signed by M SATHATHUNISHA Date: 2026.07.22 15:04:39 +0530

| | | |
|---|---|---|
| | accused U/s. 251 of Code of Criminal Procedure | |
| 14. | Date of Examination in Chief and Cross Examination of the witnesses | Witnesses / Chief / Cross:<br>PW 1 — 29.11.2024 — 29.11.2024<br>PW 2 — 29.11.2024 — 29.11.2024<br>PW 3 — 28.05.2025 — 28.05.2025<br>PW 4 — 17.10.2025 — 17.10.2025<br>PW 5 — 02.07.2026 — 02.07.2026 |
| 15. | Date of filing of all miscellaneous petitions and their results including the results on Challenge before the Superior courts except routine petitions like petition U/s. 317 of the code | -- |
| 16. | Date of Examination of the Accused U/s. 313 of the Code | 04.07.2026 |
| 17. | Details of abscondence of an accused and his appearance/production as the case may be | Nil |
| 18. | Grant of Stay by Superior courts and the results there of | -- |
| 19. | Date of Commencement of Trial | 29.11.2024 |
| 20. | Date of Closure of Trial | 02.07.2026 |
| 21. | Date of Sentence of Order | 22.07.2026 |
| 22. | Date of Service of Copy of Judgment to the Accused | ------ |
| 23. | If any delay, give Explanation | --- |

Witness table for item 14:

| Witnesses | Chief | Cross |
|---|---|---|
| PW 1 | 29.11.2024 | 29.11.2024 |
| PW 2 | 29.11.2024 | 29.11.2024 |
| PW 3 | 28.05.2025 | 28.05.2025 |
| PW 4 | 17.10.2025 | 17.10.2025 |
| PW 5 | 02.07.2026 | 02.07.2026 |

M SATHATHUNISHA

Digitally signed by M SATHATHUNISHA
Date: 2026.07.22 15:04:47 +0530

அரசுக்காக,

காவல்  ஆய்வாளர்,

இலுப்பூர் காவல் நிலையம்,

காவல் நிலைய குற்ற எண். 02/2021 .... குற்றமுறையிடுபவர்

/எதிர்/

ராமச்சந்திரன்,

த/பெ.ரவிச்சந்திரன்,

மேலப்பட்டி,

எண்ணை Po,

இலுப்பூர் Tk,

புதுக்கோட்டை Dt. ..... குற்றம் சாட்டப்பட்டவர்

இவ்வழக்கானது, என் முன்பாக இறுதியாக கடந்த 15.07.2026 அன்று இறுதியான விசாரணைக்கு வந்த பொழுது அரசுத்தரப்பில் அரசு உதவி குற்றவியல் வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.மாரிக்கண்ணு அவர்கள்  ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களைக் கேட்டும் ஆவணங்களை பார்வையிட்டு இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்தும் இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்..

**தீர்ப்புரை**

1) **அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்-**

கடந்த 01.01.2021ம் தேதி இரவு சுமார் 07.40 மணியளவில், அ.சா 1ன் கணவர் இலுப்பூர் to புதுக்கோட்டை சாலை மேட்டுச்சாலையில் 73/1 என்ற பாலத்தின் அருகே கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி இடது ஓரமாக அவருக்கு சொந்தமான TN 55 AL 9276 என்ற பதிவெண் கொண்ட TVS XL SUPER இருசக்கர வாகனத்தில வந்துக் கொண்டிருந்தபோது, அதே சாலையில் எதிரே மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்த TN 45 BK 3399 என்ற பதிவெண் கொண்ட ERS என்ற தனியார் வேருந்தை ஓட்டி வந்த எதிரி மேற்படி பேருந்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து அ.சா 1ன் கணவர் ஓட்டி சென்ற வாகனத்தின் மீது மோதியதில் அ.சா 1ன் கணவரின்

M SATHATHUNISHA

Digitally signed by M SATHATHUNISHA
Date: 2026.07.22 15:04:55 +0530

தலை மற்றும் வலது கால் நசுங்கி சம்பவ இடத்திலேயே இறப்பை ஏற்படுத்தியுள்ளார் என்றும், எனவே எதிரியின் மீது 279, 304(A)IPC ன் கீழும் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

2. இந்த வழக்கு குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு அழைப்பாணை அனுப்பட்டது. குற்றம்சாட்டப்பட்டவர்கள் முன்னிலையானவுடன் அரசு தரப்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு கு.வி.மு.ச. பிரிவு 207-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

3. வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்த்த போது இவ்வழக்கில் எதிரி மீது இதச பிரிவுகள் 279, 304(A)ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனைய போதிய முகாந்திரம் இருந்ததினால் கு.வி.மு.ச பிரிவு 240(2)-ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து தமிழில் விளக்கி வினவிய போது குற்றம் சாட்டப்பட்டவர் குற்றவாளி இல்லை என்று குற்றச்சாட்டை மறுத்தும் வழக்கு விசாரணை வேண்டினர். எனவே அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**5) <u>அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்-</u>**

(i)அ.சா.1 அஞ்சலை தனது சாட்சியத்தில், கடந்த 01.01.2021 ம் தேதி மாலை 06.30 மணிக்கு தனது கணவர் மூக்கன் என்பவர் தங்களது வீட்டில் இருந்து அவரது TVS excel வாகனத்தில் கிளம்பி இலுப்பூருக்கு அரிசி வாங்க புறப்பட்டு சென்றார் என்றும், பிறகு 07.45 மணியளவில் தனது ஊரைச் சேர்ந்த எனக்கு போன் செய்து தனது கணவருக்கு மேட்டுச்சாலை பாலத்தின் அருகே ERS 23 என்ற பேருந்து மோதி விபத்து ஏற்பட்டதாகவும், அதில் எனது கணவருக்கு தலை, கால் அடிப்பட்டதாக சொன்னார். நான் உடனே விபத்து நடந்த இடத்திற்கு வந்தேன் என்றும், தனது கணவரை பார்த்த போது அவருக்கு தலை இல்லாமல் இருந்தது என்றும்,

M SATHATHUNISHA
Digitally signed by M SATHATHUNISHA
Date: 2026.07.22 15:05:02 +0530

அவர் அங்கேயே இறந்து கிடந்தார் என்றும், பிறகு இலுப்பூர் அரசு மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலம் தனது கணவரை அனுப்பி வைத்தார்கள் என்றும், தனது கணவருக்கு பேருந்து மோதி தான் விபத்து ஏற்பட்டது என்ற தகவலை தெரிந்து கொண்டேன் என்றும், யார் பேருந்தை ஓட்டினார்கள் என்று தனக்கு தெரியாது என்றும், தன்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், போலிசார் தன்னை விசாரித்தனர் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

ii)அ.சா.2 சதீஷ்குமார் தனது சாட்சியத்தில், கடந்த 01.01.20221 ம் தேதி மாலை 07.30 மணியளவில் இலுப்பூரில் இருந்து தனது வீட்டிற்கு சென்று கொண்டிருந்தேன் என்றும், தனது பக்கத்து வீட்டை சேர்ந்த மூக்கையா என்பவர் நவம்பட்டி என்ற இடத்தில் தனக்கு முன்பாக தன்னை கடந்து சென்று கொண்டிருந்தார் என்றும், நவம்பட்டி அருகில் இருந்த லட்சுமி பெட்ரோல் பங்கில் தான் பெட்ரோல் ஊற்றி கொண்டு செல்லும் போது MKS ஸ்டோர் ரூம் தாண்டி மதர்தெரசா கல்லூரிக்கு எதிர்புறம் தனக்கு முன்னால் சென்ற மூக்கையா என்பவர் அவருக்கு முன்னால் சென்ற ERS 23 என்ற தனியார் பேருந்தை ஓவர்டேக் செய்து சென்று கொண்டிருக்கும் போது எதிரே வந்த ஒரு இரு சக்கர வாகனம் மீது மோதாமல் இருக்க இடது புறமாக சென்ற போது அவருக்கு பின்னால் வேகமாக வந்த மேற்சொன்ன பேருந்து மோதி அவருக்கு விபத்து ஏற்பட்டது என்றும், விபத்தில் அவர் மீது பேருந்து ஏறி, இறங்கியதில் தலை முழுவதும் அடிப்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார் என்றும், பிறகு தான் மூக்கையா மனைவி அஞ்சலை என்பவருக்கு தகவல் சொன்னேன் என்றும், பேருநது ஓட்டி வந்த நபர் அங்கு இல்லாததால் தான் அவரை அப்போது பார்க்கவில்லை என்றும், காவல் நிலையத்தில் பார்த்தேன் என்றும், பின்னர் அஞ்சலை வந்த பின்பு மூக்கையா பிரேதத்தை இலுப்பூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம் என்றும், வழக்கு சம்மந்தமாக போலிசார் தன்னை விசாரித்தனர் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

iii)அ.சா 3 முருகேசன் தனது சாட்சியத்தில் கடந்த 01.01.2021 மாலை சுமார் 07.30 to 07.45 மணிபோல் இலுப்பூரில் இருந்து போலம்பட்டிக்கு தனது இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருக்கும் போது மேட்டுச்சாலை பாலக்கட்டை அருகே சென்ற போது ERS பேருந்து தனக்கு முன் சென்று கொண்டிருந்து என்றும்,அந்த பேருந்து வேகமாக சென்றது எதிரே தங்கள் ஊரைச் சேர்ந்த மூக்கையா வந்த TVS EXCEL இரு சக்கர வாகனத்தில் அந்த பஸ் மோதிவிட்டது என்றும்,

M SATHATHUNISHA

Digitally signed by M SATHATHUNISHA
Date: 2026.07.22 15:05:09 +0530

அந்த பஸ் ஏறி வந்து excel வாகனத்தில் மோதியது என்றும், தான் சென்று பார்த்தபோது வலதுபுறம் கால், தலை ஆகியவற்றில் பலத்த காயம் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார் என்றும், தனது நண்பர் சதிஸ் என்பவருக்கு போன் செய்து ஆம்புலன்ஸ் வரவழைத்து இலுப்பூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன் என்றும், இது குறித்து மனைவி போலிசாரில் புகார் கொடுத்தார் என்றும், மேற்சொன்ன ERS பேருந்தை ஒட்டிய நபர் இலுப்பூரைச் சேர்ந்த ராமச்சந்திரன் ஆவார், அவரை பார்த்தால் தனக்கு நன்கு அடையாளம் தெரியும் என்றும், போலிசார் தன்னை விசாரித்தனர் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

iv)அ.சா 4 பாலமுருகன் (காவல் உதவி ஆய்வாளர்) தனது சாட்சியத்தில் கடந்த 01.01.2021 ம் தேதி தான் இலுப்பூர் காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பில் இருந்த போது பூவம்பட்டியை சேர்ந்த மூக்கையா மனைவி அஞ்சலை என்பவல் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நிலையக் குற்ற எண். 02/2021 , சட்ட பிரிவுகள் 279, 304 (A) ன் கீழ் அச்சு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றும், பின்பு அச்சு முதல் தகவல் அறிக்கையின் நகலை புகாருடன் இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றும், மேல் விசாரணைக்கு காவல் ஆய்வாளர் உஷாநந்தினி அவர்களின் பார்வைக்கு வைத்தேன் என்றும், வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

v)அ.சா 5 உஷாநந்தினி (காவல் ஆய்வாளர்) தனது சாட்சியத்தில் கடந்த 2021 ஆம் ஆண்டு இலுப்பூர் காவல் நிலையத்தில் தான் ஆய்வாளராக பணியில் இருந்தபோது உதவி ஆய்வாளர் பாலமுருகன் என்பவர் பதிவு செய்து தனது பார்வைக்கு வைத்த குற்ற எண் 2/2021 என்ற வழக்கினை தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே சம்பவ இடம் சென்று காலை 6.15 மணி அளவில் சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகள் பழனிசாமி மற்றும் சேவியர் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன் என்றும், இவ்வழக்கின் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 8 வரையிலான சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன் என்றும், இவ்வழக்கில் இறந்த நபரின் பிரேதத்தை கைப்பற்றி சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரனை செய்தேன் என்றும், பின்னர், இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட வாகனங்களை வாகன ஆய்வாளர் சசிகுமார் என்பவருக்கு மோட்டார் வாகனங்களை ஆய்வுக்கு அனுப்பி அவரிடமிருந்து சான்று அறிக்கை பெற்று,

M SATHATHUNISHA Digitally signed by M SATHATHUNISHA Date: 2026.07.22 15:05:17 +0530

வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், பின்னர் இறந்துபோனவருக்கு பிரேத விசாரணை செய்த மருத்துவர் சுதர்சன் என்பவரை விசாரித்து, அறிக்கை பெற்று, வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், பின்னர், சம்பவம் உண்மை என தெரிய வந்து, எதிரியை தேடி வந்த நிலையில், நிலையம் ஆஜரான எதிரியை தக்க குற்றகாரணம் கூறி கைது செய்து, தக்க நிலைய பிணையில் விடுவித்தேன் என்றும், பின்னர் இவ்வழக்கின் விசாரணையை முடித்து எதிரிக்கு எதிராக அதே சட்டப்பிரிவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

மேலும், இவ்வழக்கின் பதிவு செய்யப்பட்ட சாட்சியங்களில் குற்றம்சாட்டப்பட்டவருக்கு பாதகமான சங்கதிகளை குறித்து கு.வி.மு.ச 313 (1) (ஆ)ன் கீழ் குற்றம்சாட்டப்பட்டவரிடமிருந்து எடுத்துக் கூறி விளக்கி வினவிய போது, அரசு தரப்பு சாட்சியம் பொய் என்று கூறியுள்ளனர். மேலும் தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சி இல்லை என்றும் கூறினர்.

6. குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பில் சாட்சிகள் எவரும் விசாரணை செய்யப்படவில்லை.

7. இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் அரசு தரப்பில் குற்றம்சாட்டப்பட்டவர்கள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டு அரசுத் தரப்பால் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா ? என்பதே தீர்வுக்குரிய பிரச்சனையாகும்.

**8) தீர்வு-**

**(1)** இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்ததில் அரசு தரப்பு வழக்கானது, கடந்த 01.01.2021ம் தேதி இரவு சுமார் 07.40 மணியளவில், அ.சா 1ன் கணவர் இலுப்பூர் to புதுக்கோட்டை சாலை மேட்டுச்சாலையில் 73/1 என்ற பாலத்தின் அருகே கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி இடது ஓரமாக அவருக்கு சொந்தமான TN 55 AL 9276 என்ற பதிவெண் கொண்ட TVS XL SUPER இருசக்கர வாகனத்தில வந்துக் கொண்டிருந்தபோது, அதே

M SATHATHUNISHA

Digitally signed by M SATHATHUNISHA
Date: 2026.07.22 15:05:24 +0530

சாலையில் எதிரே மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்த TN 45 BK 3399 என்ற பதிவெண் கொண்ட ERS என்ற தனியார் வேருந்தை ஓட்டி வந்த எதிரி மேற்படி பேருந்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து அ.சா 1ன் கணவர் ஓட்டி சென்ற வாகனத்தின் மீது மோதியதில் அ.சா 1ன் கணவரின் தலை மற்றும் வலது கால் நசுங்கி சம்பவ இடத்திலேயே இறப்பை ஏற்படுத்தியுள்ளார் என்றும் கூறப்பட்டுள்ளது.

2.இதனைக் குறித்து அரசு தரப்பு சாட்சியங்களை பரிசீலனை செய்ததில், இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா 1 தனது முதல் விசாரணையில் சம்பவத்தைக் குறித்து தான் கேள்விப்பட்டது குறித்தும், புகார் மனு கொடுத்தது குறித்தும், சாட்சியம் அளித்துள்ளார் என்பது தெரியவருகிறது. அரசு தரப்பில் அ.சா 1ன் கணவர் தனது வீட்டில் இருந்து கிளம்பி இலுப்பூருக்குச் சென்றபோது, அதாவது கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி சென்ற போது விபத்து ஏற்பட்டதாக கூறப்பட்டுள்ள நிலையில், அ.சா 1 தனது குறுக்கு விசாரணையில் மேற்படி சங்கதிக்கு முரண்பாடாக திரும்ப வீட்டிற்கு வரும்போது, அதாவது மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வரும்போது விபத்து ஏற்பட்டதாக சாட்சியம் அளித்துள்ளார் என்பது தெரியவருகிறது. மேலும், அ.சா 1 தனது புகாரிலும், போலீஸ் விசாரணையிலும் சம்பவம் குறித்து கேள்விப்பட்டு, தான் நேரடியாக மருத்துவமனைக்கு சென்றதாக குறிப்பிட்டுள்ள நிலையில், தனது முதல் விசாரணையில் சம்பவம் குறித்து கேள்விப்பட்டு தான் முதலில் சம்பவ இடத்திற்கு சென்றதாக சாட்சியம் அளித்துள்ளார் என்பது தெரியவருகிறது. மேலும், அ.சா 1 தனது குறுக்கு விசாரணையில், விபத்து ஏற்படுத்திய ஓட்டுநர் யார் என்று தெரியாது என்றும், சாட்சியம் அளித்துள்ளார் என்பது தெரியவருகிறது. மேற்கண்ட பரிசீலனைகளின் அடிப்படையில், மேற்படி அ.சா 1ன் சாட்சியத்திலிருந்து சம்பவம் நடந்த விதம் குறித்தும், தான் கேள்விப்பட்டது குறித்தும், சம்பவ இடம் சென்றது குறித்தும், எதிரியை அடையாளப்படுத்தி அவர் மீது புகார் கொடுத்தது குறித்தும் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளார் என்பது தெரியவருகிறது. எனவே அ.சா 1ன் சாட்சியம் இவ்வழக்கிற்கு வலு சேர்க்கும் விதத்தில் இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

M SATHATHUNISHA

Digitally signed by M SATHATHUNISHA
Date: 2026.07.22 15:05:31 +0530

3. மேலும், அரசு தரப்பில் அ.சா 1 கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சென்றதாகவும், எதிரே வந்த எதிரியின் வாகனம் வலது புறம் ஏறி விபத்து ஏற்படுத்தியதாகவும், கூறியுள்ள நிலையில், சம்பவத்தை குறித்து கண்ணுற்றதாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள அ.சா 2 தனது சாட்சியத்தில், மேற்படி அரசு தரப்பு வழக்கை ஒத்துரைக்காமல் புதிய சங்கதியாக பின்வருமாறு சாட்சியம் அளித்துள்ளார் என்பது தெரியவருகிறது.

**அ.சா 2ன் சாட்சியம் பின்வருமாறு:-**

**"கடந்த 01.01.2021ம் தேதி மாலை 07.30 மணியளவில் இலுப்பூரிலிருந்து எனது வீட்டிற்கு சென்றுக் கொண்டிருந்தேன். எனது பக்கத்து வீட்டைச் சேர்ந்த மூக்கையா என்பவர் நவம்பட்டி என்ற இடத்தில் எனக்கு முன்பாக என்னைக் கடந்து சென்றுக் கொண்டிருந்தார். நவம்பட்டி அருகில் இருந்த லெட்சுமி பெட்ரோல் பங்க்-ல் நான் பெட்ரோல் ஊற்றிக்கொண்டு செல்லும் போது, MKS ஸ்டோர் ரூம் தாண்டி மதர்தெரசா கல்லூரிக்கு எதிர்புறம் எனக்கு முன்னால் சென்ற மூக்கையா என்பவர் அவருக்கு முன்னால் சென்ற ERS 23 என்ற தனியார் பேருந்தை ஓவர் டேக் செய்துக் கொண்டிருக்கும் போது, எதிரே வந்த இருசக்கர வாகனம் மீது மோதாமல் இருக்க இடதுபுறமாக சென்றபோது, அவருக்கு பின்னால் வேகமாக வந்த மேற்சொன்ன பேருந்து மோதி அவருக்கு விபத்து ஏற்பட்டது."** என சாட்சியம் அளித்துள்ளார்.

மேற்படி அ.சா 2 தனது சாட்சியத்தில், இறந்த நபரான மூக்கையா என்பவர் அவருக்கு முன்னால் சென்ற எதிரியின் பேருந்தை ஓவர் டேக் செய்தபோது, எதிரே வந்த இருசக்கர வாகனம் தன் மீது மோதாமல் இருக்க இடது புறமாக சென்ற போது, பின்னால் வந்த பேருந்தில் மோதி விபத்து ஏற்படுத்தியதாக அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலும் முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதைப் பார்க்கும் பொழுதும், மேலும், அ.சா 2 தனது சாட்சியத்தில் பேருந்து ஓட்டி வந்த நபரை தான் சம்பவ இடத்தில் பார்க்கவில்லை என சாட்சியம் அளித்துள்ளதைப் பார்க்கும் பொழுதும், மேலும், அ.சா 2 தனது குறுக்கு விசாரணையில், விபத்து நடந்ததாக சொல்லப்படும் பேருந்துக்கும், அதற்கு பின்னால் வந்துக் கொண்டிருந்த தனக்கும் சுமார் அரை கி.மீ தூரம் இருக்கும் என சாட்சியம் அளித்துள்ளதைப் பார்க்கும்

M SATHATHUNISHA
Digitally signed by M SATHATHUNISHA
Date: 2026.07.22 15:05:38 +0530

பொழுதும், அ.சா 2 சம்பவத்தை கண்ணுற்றதாக கூறப்படும் சங்கதி குறித்து நம்பத்தகுந்ததாக இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

4. மேலும், சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள மற்றொரு சாட்சியான அ.சா 3 தனது முதல் விசாரணையில், தனக்கு முன்னால் ERS பேருந்து வேகமாக சென்றுக்கொண்டிருந்ததாகவும், எதிரே இறந்த நபர் மூக்கையா ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தில் பேருந்து மோதி விபத்து ஏற்படுத்தியதாக சாட்சியம் அளித்துள்ள போதிலும், மேற்கண்ட சங்கதிக்கு முரண்பாடாக தனது குறுக்கு விசாரணையில், சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் விபத்தில் இறந்த நபர் தன்னையும், பேருந்தையும் முந்தி சென்றதாக சாட்சியம் அளித்துள்ளதைப் பார்க்கும் பொழுது, சம்பவ நடந்த விதம் குறித்து அவரது சாட்சியம் நம்பத்தகுந்ததாக இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

5. மேலும், எதிரி தரப்பில் இறந்த நபர் தான் வாகனத்தை ஓட்டி வரும்போது நின்றுக் கொண்டிந்த வாகனத்தை கவனிக்காமல் அந்த வாகனத்தில் இடித்து தூக்கி எறிப்பட்டு, அவர் சென்ற திசையில் இருந்து எதிர் திசையில் வந்துக் கொண்டிருந்த பேருந்தின் சக்கரத்தில் விழுந்துவிட்டதாகவும், பாலக்கட்டையின் மீது சென்ற எதிரியால் அந்த வாகனத்தை நிறுத்த முடியவில்லை என்றும், அதனால் பேருந்தின் சக்கரம் ஏறி, இறங்கியதாகவும் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ள சங்கதிகளுக்கு ஒத்துரைக்கும் விதமாக அ.சா 1 மற்றும் அ.சா 3 ஆகிய சாட்சிகள் பின்வருமாறு சாட்சியங்கள் அளித்துள்ளனர் என்பது தெரியவருகிறது.

**அ.சா 1ன் சாட்சியம் பின்வருமாறு:-**

**"விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடத்தில், ஒரு வாகனமும், ஒரு பெண்ணும், ஒரு ஆணும் நின்றுக் கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். நின்றுக்கொண்டிருந்த மேற்சொன்ன வாகனம் ஒரு பெண் மற்றும் ஆணை எனது கணவர் முந்திச் செல்லும் போது, விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள் என்றால் சரிதான்."**

M SATHATHUNISHA
Digitally signed by M SATHATHUNISHA
Date: 2026.07.22 15:05:45 +0530

**அ.சா.3ன் சாட்சியம் பின்வருமாறு:-**

**"சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் இறந்துபோன நபர் என்னையும், மேற்சொன்ன பேருந்தையும், முந்தி சென்றார் என்றால் சரிதான். அவ்வாறு முந்திச் செல்லும் போது, ஒரு ஆணும், பெண்ணும் அவர்களது இருசக்கர வாகனம் பழுதடைந்ததால், பாலக்கட்டை அருகே நின்றுக் கொண்டிருந்தனர் என்றால் சரிதான்."**

எனவே, மேற்கண்ட அனைத்து பரிசீலனைகளின் அடிப்படையில், எதிரி தனது பேருந்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து அ.சா 1ன் கணவர் ஓட்டிச் சென்ற வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாக அரசு தரப்பில் கூறப்படும் சங்கதி குறித்து அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படாததால், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்க இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவுகள் 279, 304(A) ன் கீழான குற்றச்சாட்டுக்கள் முழுவதுமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் தீர்மானித்து சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி கு.வி.மு.ச பிரிவு 255(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகின்றது.

இவ்வழக்கில் வழக்குச் சொத்துக்கள் எதுவும் நீதிமன்றம் ஆஜர்ப்படுத்தப்படவில்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு நேரடியாக அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு ஜீலை திங்கள் 22ம் நாள் இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

M SATHATHUNISHA

Digitally signed by M SATHATHUNISHA
Date: 2026.07.22 15:05:53 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
இலுப்பூர்.

**அரசு தரப்பு சாட்சிகள்-**

அ.சா.1.அஞ்சலை
அ.சா.2.சதீஷ்குமார்
அ.சா.3.முருகேசன்
அ.சா.4.பாலமுருகன் (காவல் உதவி ஆய்வாளர்)
அ.சா.5.உஷாநந்தினி (காவல் ஆய்வாளர்)

## Judicial Form No:68

| S.No of the exhibit | Description of the exhibits | Date when the exhibit was filed in the case | How marked | By whom filed | Remarks |
|---|---|---|---|---|---|
| 1. | புகார் மனு | 29.11.2024 | அ.சா.ஆ.1 | அ.சா.1 | அசல் |
| 2. | அச்சு முதல் தகவல் அறிக்கை | 17.10.2025 | அ.சா.ஆ.2 | அ.சா.4 | அசல் |
| 3. | மாதிரி வரைபடம் | 02.07.2026 | அ.சா.ஆ.3 | அ.சா.5 | அசல் |
| 4. | பார்வை மகஜர் | 02.07.2026 | அ.சா.ஆ.4 | அ.சா.5 | அசல் |
| 5. | பிரேத பரிசோதனை அறிக்கை | 02.07.2026 | அ.சா.ஆ.5 | அ.சா.5 | அசல் |
| 6. | மோட்டார் வாகன அறிக்கை | 02.07.2026 | அ.சா.ஆ.6 | அ.சா.5 | அசல் |
| 7. | பிரேத விசாரணை அறிக்கை | 02.07.2026 | அ.சா.ஆ.7 | அ.சா.5 | அசல் |

**எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்... இல்லை**

**சான்றுபொருள்** .... இல்லை.

M SATHATHUNISHA
Digitally signed by M SATHATHUNISHA
Date: 2026.07.22 15:05:59 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
இலுப்பூர்

**குறிப்பு-**

1. தீர்ப்பு பற்றிய விபரம் காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது,
2. இவ்வழக்கு விசாரணையின்போது எதிரி பிணையிலிருந்தார்.
3. இவ்வழக்கின் சாட்சிகள் யாரும் 3 வாய்தாவிற்குமேல் விசாரணைக்காக நிறுத்தி வைக்கப்படவில்லை.
4. இவ்வழக்கின் முடிவு குறித்து சிறு குறிப்பு காவல் துறையினருக்கு வழங்கப்பட்டது.

//உண்மை நகல்//

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

இலுப்பூர்.